1995 மார்ச் 29]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகபட்சமாக 1000 வாக்காளர்கள் ஒரு வாக்குச் சாவடிக்கு இருக்க வேண்டுமென்பது தேர்தல் ஆணையத்தினுடைய குறிப்பாகும். ஆயிரத்திற்கும் மேற்பட்டு ஒரு வாக்குச்சாவடிக்குச் செல்லுகிறார்கள் என்று சொன்னால் அதை இரண்டாகப் பிரிப்பதிலே பொருள் இருக்கிறது. ஆனால் மடப்பட்டு, தொரடிப்பட்டு, மாத்தூர், எருக்கம்பட்டு, மேல்மருகம் ஆகிய அவ்வளவு ஊர்களையும் சேர்த்து 760 வாக்காளர்கள்தான் ஆண்கள் பகுதியைப் பொறுத்தவரையிலே வருகிறார்கள். பெண்கள் பகுதியைப் பொறுத்தவரையில் மடப்பட்டு, தொரடிப்பட்டு, மாத்தூர், எருக்கம்பட்டு, மேல்மருகம் ஆகிய ஊர்களிலிருந்து 812 பேர் வருகிறார்கள். தொரடிப்பட்டு ஊரிலே ஆண்கள் 200 பேரும் பெண்கள் 217 பேரும், ஆக 417 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கென ஒரு தனி வாக்குசாவடி அமைப்பதற்கு வழியில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 142, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

142—

ஆரணி ஒன்றியம், எம். ஜி. ஆர். நகர் வாசிகளுக்கு பட்டா வழங்குதல்

*10869—**டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி ஒன்றியம், பையூர் குளக்கரை எம்.ஜி. ஆர். நகர் வாசிகளுக்கு பட்டா அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆரணி வட்டம், பையூர் கிராமம், எம்.ஜி.ஆர். நகரில் உள்ள நிலம் குட்டை புறம்போக்கு நிலமாகும். குட்டைப் புறம்போக்கு நிலங்களை ஒப்படை வழங்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. குட்டை புறம்போக்கு நிலங்களை நத்தமாக மாற்றுவதால் இயற்கை நீர்வளம் பாதிக்கப்படும் என்பதால் மேற்படி இடத்திற்குப் பட்டா வழங்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[*1995 மார்ச் 29*

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடம் குட்டைப் புறம்போக்கு என்று சொன்னார்கள். அந்த இடத்திலே நீர்ப்பிடிப்பு இல்லை. அதற்கு எதிரிலேதான் பையூர் குளம் இருக்கிறது. அந்தப் பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு சாலை வசதி செய்து கொடுக்கப்பட்டு, தெரு விளக்குகள் கூட கொடுக்கப்பட்டுவிட்டன. ஆனால் பட்டா மட்டும் கொடுக்கப்படவில்லை. அங்கே தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அரிசன மக்கள் இருக்கிறார்கள். இப்படி எல்லா இனத்தவரும் கலந்தவண்ணம் கிட்டத்தட்ட *100* குடும்பங்கள் அங்கே வீடுகட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த குட்டைப் புறம்போக்கை நத்தமாக மாற்றி அவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரியான கோரிக்கைகள் தமிழகத்திலிருந்து பல இடங்களில் வருகின்றன. பொதுவாகச் சொல்லப்போகிறபோது, நீரோட்டம், குளம், குட்டைகளை விலங்குகளுக்கு மட்டுமின்றி பொதுமக்களும் பயன்படுத்துகிறார்கள். சில இடங்களிலே அதை குடிநீராகவும் பயன்படுத்துகிறார்கள். தொடர்ந்து குடிநீர் வழங்கும் வகையில் ஆறு, குளம், இவை உட்பட்ட பகுதியில் கிணறுகள் வெட்டும் பழக்கம் பரவலாக இருக்கிறது. மேலும் நீரோட்டங்கள், குளம், குட்டைகள் இவற்றின் அருகாமையில் உள்ள கிணறுகள் நிலத்தடி நீர் உயர இவை பயன்படுகின்றன. குட்டைப் புறம்போக்கு என்றால் அது குட்டையாக இல்லாவிட்டாலும், நிலத்தடி நீரைக் காப்பாற்றுகிற தன்மை உடையதாக இருக்கிறது. நீர் ஓட்டங்களையும் குளங்களையும், குட்டைகளையும் பாதுகாத்து பராமரிக்கவேண்டியது மிகவும் அவசியம். இந்த மாதிரி உள்ள எல்லா நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளையும் அகற்றுமாறும், அவற்றில் ஆக்கிரமிப்பு ஏற்படாதவாறும் கவனித்துக்கொள்ளவேண்டும் என்றும் அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன அத்தனையையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். இருந்தாலும்கூட, கருணை உள்ளம் கொண்ட நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய

1995 மார்ச் 29]

ஆட்சியிலே அந்த மக்கள் கிட்டத்தட்ட 20 ஆண்டுக்காலமாக குடியிருக்கிறார்கள். அவர்கள் ஏற்கனவே அங்கே குடிசைகட்டி குடியிருக்கவில்லை, பெர்மனன்ட் கன்ஸ்ட்ரக்ஷனே அவர்கள் கட்டியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. அவர்களுக்குச் சாலையும் போடப்பட்டிருக்கிறது. தெருவிளக்குகள் அமைத்தாகிவிட்டது. இனிமேல் அவற்றை அகற்றுவது என்பது எனக்கு நல்ல உத்தேசமாகத் தோன்றவில்லை. ஆகவே அந்த இடத்திலே அங்கே பட்டா வழங்குவதை கருணையோடு அமைச்சர் மீண்டும் பரிசீலனை செய்வார்களா? விதிமுறையைத் தளர்த்தி, as a special case விதிமுறையைத் தளர்த்தி ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்த தவறுகளை எல்லாம் ஏற்றுக் கொண்டு அதை நடைமுறைப்படுத்தினால் மீண்டும் தவறுகள் வளர்ந்து கொண்டே போகும். ஆகவே தவறு வந்தாலும், அது தேவை என்றாலும் அது தளர்த்தப்படமாட்டாது. ஆனால் குறிப்பிட்ட அந்த இடத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபடி அதனால் எந்தவிதமான பாதகமும் ஏற்படாது, அதனாலே நிலத்தடி நீர் பாதிக்கப்படாது என்றால், இதை மட்டுமல்ல, இதைப் போன்ற பல இடங்களையும் ஆய்வு செய்வதற்கு இந்த அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே இதையும் அரசு எண்ணும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 143, டாக்டர். அ. ஸ்ரீதரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

143—

வால்பாறை மருத்துவமனையில்
அறுவை சிகிச்சை நிபுணர் பணியமர்த்தல்

***11724—டாக்டர் அ. ஸ்ரீதரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நிபுணர் பணியமர்த்தல் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?